# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

## ஊடக அறிக்கை

**<u>நிறுவக மேம்பாடு மற்றும் நிபுணத்துவத்திற்கான புதிய சிந்தனைகள் மிக்க தலைமைத்துவம் குறித்து சிறுபான்மை இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம்</u>**

**<u>(2026 பெப்ரவரி 23-27 )</u>**

இலங்கையின் 12 பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 24 சிறுபான்மை இளைஞர்கள் 2026 பெப்ரவரி 23-27 வரை நொய்டாவில் உள்ள தேசிய தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தில் (NIESBUD) நிறுவக மேம்பாடு மற்றும் நிபுணத்துவத்திற்கான புதிய சிந்தனைகள் மிக்க தலைமைத்துவம் குறித்த 5 நாள் பயிற்சி திட்டத்தில் கலந்துகொண்டனர். NIESBUD ஆளுமைவிருத்தி மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் ஒரு முதன்மை அமைப்பாகும், இது தொழில்முனைவு மற்றும் ஆளுமையினை மேம்படுத்துவதற்காக பயிற்சி, ஆலோசனை, ஆராய்ச்சி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

2. தொழில்நுட்ப இடையூறுகள், பொருளாதார ஸ்திரமற்ற நிலை மற்றும் மாறிவரும் பூகோள அரசியல் ஆகியவற்றால் ஏற்படும் பிரதிபலிப்புகளுடன் வேகமாக வளர்ந்து வருவதும் சிக்கல்கள் நிறைந்ததுமான உலகளாவிய சூழலில் பங்கேற்பாளர்களின் தலைமைத்துவ செயல்திறனை வலுப்படுத்தும் இலக்குடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்போது, பங்கேற்பாளர்கள் அதிநவீன தலைமைத்துவக் கட்டமைப்புகள் மற்றும் பயிலமர்வுகள், உலகளாவிய சிறந்த நடைமுறைகளின் ஆய்வு அறிக்கைகள், குழு ரீதியான உருவகப்படுத்தல்கள் மற்றும் நிஜ உலகில் சிக்கல் தீர்க்கும் பயிற்சிகள் ஆகியவை உள்ளிட்ட நேரடியான அனுபவங்களை பெறும் கற்றல் முறைகள் உள்ளிட்டவற்றை இத்திட்டம் மூலம் நேரடியாக அறிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். .

3. இச்செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட முக்கிய தொனிப்பொருட்களாக: புதுமையான சிந்தனைகளுடனான தலைமைத்துவம்; படைப்பாற்றல் மிக்க சிந்தனை மற்றும் புத்தாக்கங்களை நோக்கிய கட்டமைக்கப்பட்ட அணுகுமுறைகள்; பணியாளர் ஈடுபாட்டு மூலோபாயம்; வடிவமைத்தலுக்கான சிந்தனை மூலம் சிக்கல்களுக்கான தீர்வு; சூழ்நிலைக்கான தலைமைத்துவம்; மற்றும் உணர்ச்சி நுண்ணறிவு, ஆகியவை அடங்குகின்றன. இந்த முழுமையான கருத்திட்டம் பங்கேற்பாளர்களின் மூலோபாய ஆளுமைகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், ஸ்திரமான வளர்ச்சி மற்றும் நிபுணத்துவத்துக்காக இந்த நுண்ணறிவுகளை அவர்களின் அரசியல் அமைப்புகளுக்கு நேரடியாகப் பயன்படுத்த அவர்களுக்கு வலுவூட்டியது.

4. அத்துடன், தாஜ்மஹால் மற்றும் ஆக்ரா கோட்டை ஆகியவற்றுக்கான விஜயம் மூலம் கலாசார ரீதியான ஈடுபாட்டையும் இந்த திட்டம் உள்ளடக்கியிருந்தது. இது பங்கேற்பாளர்களுக்கு இந்தியாவின் கலாசார மரபை வெளிப்படுத்தியதுடன் முறைசாரா இணைக் கற்றல் மற்றும் கலாசார ரீதியான புரிதலுக்கான வாய்ப்பினையும் வழங்கியது.

5. 2025 ஏப்ரலில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்ட இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது வெளியிட்ட அறிவிப்பிற்கு அமைவாக இலங்கை அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் 700 தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி ஆசனங்களை இந்தியா வழங்குகின்றது. அத்துடன், அரசியல் எல்லைகளுக்கு அப்பால், இலங்கை இளைஞர்களின் ஆளுமை விருத்திக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த திட்டம் வலுவாக்குகின்றது.

* * * * *

**கொழும்பு**
**02 மார்ச் 2026**